# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## CC.No. 144/2018

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–02, திரு.பால்ராஜ் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பால்ராஜ் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | ரத்தினம் | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | PW02 |
| வட்டம் | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |

( எதிரி ஆஜர்).

### முதல் விசாரணை

நான் தேவாமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது மகள். கடந்த 2017ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை, ஒரு நாள் எனது அண்ணன் மகன் ராஜேஷ்குமார் எனது மகள் ஐஸ்வர்யாவுக்கு உடம்பு சரியில்லை என்று இருசக்கர வாகனத்தில் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். ஜெயங்கொண்டத்திலிருந்து உத்திரக்குடி செல்லும் மெயின்ரோட்டில், விபத்து ஏற்பட்டது என்று நான் போன் மூலம் கேள்விப்பட்டேன். எதிர்த்தால்போல் வந்த வண்டி மோதி எனது மகளின் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எதிரே வந்த இருசக்கர வாகனத்தில் பின்னால் வந்த நபரும் இறந்துவிட்டார். எதிரே வந்த வண்டிக்கு அருகில் மாட்டுவண்டி வந்ததால், எனது மகன் ஓட்டி வந்த வண்டி மீது மோதி, எனது மகளுக்கு காலில் எலும்பு முறிவும், எனது அண்ணன் மகனுக்கு முகம், கால், கையில் அடிபட்டது. எனது அண்ணன் மகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள்.

### எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரணை செய்தபோதும், தற்போது நீதிமன்றத்தில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் வந்து விசாரித்தபோது, எனது மகள் மருத்துவ சிகிச்சையில் இருந்ததால், அந்த விவரம் அவருக்கு தெரியாது. போலீசார் என்னை

வீட்டில் வைத்து விசாரித்தார்கள். இந்த சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது. இருசக்கர வாகனம் சென்றுக்கொண்டிருந்தபோது, ரோட்டில் வந்த மாட்டி வண்டியில், மாடுகள் தாறுமாறாக சென்றதால், இருசக்கர வாகனங்கள் மோதிக்கொண்டு விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்திற்கு எதிரி காரணமில்லை என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/–இரா.இராஜசேகரன்,எல்.எல்.எம்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.